13th March 1964]

கூட, நடை முறையில் அம்மாதிரி செய்யப்படவில்லை. அரசாங்கத்தினுல் இது சரியாகக் கண்காணிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சைகிள் ரிக்ஷாக்களைப் பொறுத்தவரையில், சென்னை நகரத்தில் அவைகளையும் குறைத்து விடவேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். வெளியிடங்களில் சைக்கிள் ரிக்ஷாக்களை எவ்வளவு தூரம் அனுமதிக்க வேண்டும் என்பதைச் சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. வேலை இழந்த தொழிலாளர்கள் மிகக் குறைவு. ஏதோ வருஷம் ஒன்றுக்கு 15, 20, என்ற முறையில் தான் இப்பொழுது ரிக்ஷாக்களைக் குறைத்துக்கொண்டு வருகிறோம். எப்பொழுது ரிக்ஷாக்களை இனி ஓட்ட முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு 'கண்டெம்' செய்யப்படுகின்றனவோ அப்பொழுதெல்லாம் அவைகளை நிறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகையினுல், இம்மாதிரிப் பிரச்னை சர்க்காரின் கவனத்திற்குக் கடுமையாக வரவில்லை.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : இன்று காலையில் ஹிந்து பேப்பரில் ஒரு பெரிய படம் போட்டு, ஒரு ஆப்ரிகன் ஸ்டேட் பிரைம் மினிஸ்டர் ஒரு ரிக்ஷா புல்லருக்கு 100 பவுன் காம்பன்சேஷன் கொடுப்பதாக பிராமிஸ் செய்திருப்பதாகவும், ஒரு ரிக்ஷாவை சுட்டெரிக்கிறமாதிரியும் (பான்பைர்) ஒரு போட்டோ வந்திருக்கிறது. அதே மாதிரி நம் மாகாணத்திலும் ரிக்ஷா புல்லருக்கு 100 பவுன் காம்பன்சேஷன் கொடுக்காவிட்டாலும், ஏதாவது ஒரு வாட்ச்மன் வேலை கொடுத்தால் கூட அவர்கள் ஒரு தொழிலை நடத்தலாம் என்று சர்க்கார் நினைக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸான்ஸிபாருக்கும் நம் ராஜ்யத்திற்கும் பெரிய வித்தியாசம் இருக்கின்றது. அங்கே ஜனத்தொகை மிகவும் குறைவு. நம்முடைய ராஜ்யத்தில் ஜனத்தொகை ஜாஸ்தி. அங்கே ரிக்ஷாக்கள் எல்லாவற்றையும் ஒழித்து விடலாம், மிகக் குறைவாக இருப்பதினுலே. நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால், ரிக்ஷாக்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனுல் இதைப் படிப்படியாக ஒழித்துவிடவேண்டும் என்பதுதான் சர்க்காரின் லட்சியம். அதை இப்பொழுது நாம் நடத்திக்கொண்டு வருகிறோம்.

செயற்கை உடலுறுப்புத் தயாரிப்பு நிலையம்

*251 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கை, கால்கள் போன்ற செயற்கை உடல் உறுப்புகள் தயாரிக்கும் நிலையத்தை அரசாங்க வைத்தியக் கல்லூரியில் ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சென்னை அரசாங்க ஜெனரல் ஆஸ்பத்திரியிலுள்ள முடநோய் சிகிச்சைத் துறையில் ஒரு பகுதியாக ஆரம்பிக்கப்படவிருக்கும், செயற்கை உடல்

உறுப்பு நிலையத்திற்குத் தேவையான கட்டிடம் பூர்த்தியாகி விட்டது. இந் நிலையத்திற்காக அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரும் வேலையில் சேர்ந்துவிட்டனர். அவர்களில் சிலர் பம்பாயிலும் பூனாவிலும் உள்ள செயற்கை உடலுறுப்பு நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். இந் உறுப்புகளைச் செய்வதற்குரிய யந்திரங்கள் ரூ. 81,000 செலவில் நிறுவப்பட்டுள்ளன. புனரமைப்புத் துறைக்கு வேண்டிய சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் அதற்குத் தேவையான தோல், இரும்பு, மரம் போன்ற மூலப் பொருட்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையம் பணியாற்றத் தொடங்கிவிட்டது.

Anicut across Araniar

* 252 *Q.*—SRI A. RAGHAVA REDDI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an anicut across Araniar near Annappanaickenkuppam village ;

(*b*) whether the necessary estimates have been prepared ; and

(*c*) if not, the reasons for the delay ?

THE HON. SRI P. KAKKAN : (a) (*b*) Yes.

(*c*) Does not arise.

(அ) & (இ) : ஆம்.

(உ) வினாவிற்கு இடம் இல்லை.

பொது இடங்கள் அல்லது சாலைகளின் பெயர்களை மாற்றுதல்.

* 253 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொது இடங்கள் அல்லது சாலைகளின் பெயர்களை மாற்றக் கூடாது என்று அரசாங்கம் நகர மன்றங்களுக்கு ஏதேனும் உத்தரவிட்டிருக்கின்றதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

தென்பசார் கிராமத்தில் ஏரி மராமத்து

* 254 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் வட்டம் தென்பசார் கிராம ஏரி கலிங்கல் மாற்றி அமைக்கும் மராமத்து வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : 1963-64 இறுதியில் இவ்வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு 1964-65-க்குள் முடிக்கப்படும்.

The work will be taken up at the end of 1963-64 and completed by 1964–65.